**திருத்தம்**

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**இலங்கை விஞ்ஞான சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2,469 மற்றும் 2025.12.26 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025 இன் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலுக்காக பின்வரும் திருத்தங்கள் உள்ளடக்கப்படுவதுடன், அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி காணப்படும்.

நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்வது 2026.02.20 ஆந் திகதி 21:00 மணிக்கு நிறைவடையும்.

தகைமையை பரீட்சிக்கும் தினம் 2026.01.23 ஆந் தினமாக மாற்றமின்றி காணப்படும்.

**6.2 கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :**

| *தொடர் இலக்கம்* | *திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 03 | வளிமண்டலவியல் திணைக்களம் | வளிமண்டல வியலாளர் | 01 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து,<br><br>(அ) பௌதீக விஞ்ஞானம் அல்லது கணிதம் தொடர்பாக விஞ்ஞானமாணி விசேட/ கௌரவ பட்டமொன்றை பெற்றிருத்தல் மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் (பயிற்சி காலத்தை தவிர) 15 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.<br><br>அல்லது<br><br>(ஆ) பௌதீக விஞ்ஞானம் அல்லது கணிதப் பாடம் உட்பட விஞ்ஞானமாணி சாதாரண பட்டமொன்றை பெற்றிருத்தல் மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் (பயிற்சி காலத்தை தவிர) 15 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல். |

| *தொடர் இலக்கம்* | *திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 03 (I) | வளிமண்டலவியல் திணைக்களம் | வளிமண்டல வியலாளர் | 02 | (அ) வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் விசேட தரத்தின் உத்தியோகத் தராகவிருத்தல்.<br><br>அல்லது<br><br>(ஆ) வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில் நுட்ப சேவையில் தரம் I இல் பத்து (10) வருடம் முனைப் பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை கொண் டிருத்தல். |

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் படி,

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள், மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026.01.21,

01-341